
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1258

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

123

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

# தமிழ்நாட்டின் சுதந்திரத்துக்காக உழைத்திருப்பார், பன்னீர்செல்வம்!

‘நீதிக்கட்சியின் கோவை ஜில்லா 5-வது மாநாடு’, ஈரோட்டில் 07.04.1940 அன்று, செட்டிநாட்டு இளவரசர் முத்தையா செட்டியார் தலைமையில், நடைபெற்றது. பெரியார், ஈ.வெ.கிருஷ்ணசாமி, சிக்கைய நாயக்கர் உட்பட பலர், ஈரோடு ரயில் நிலையத்திற்கு வருகைதந்து, மாநாட்டிற்கு வருகைதந்த தலைவர்களை வரவேற்று அழைத்துச்சென்றனர். வெல்ஸ் பார்க்கில் இருந்து, காலை 9 மணிக்கு மாநாட்டு ஊர்வலம் தொடங்கியது. முத்தைய செட்டியார், ஆர்.கே.சண்முகம் செட்டியார், என்.ஆர்.சாமியப்ப முதலியார், ‘தாருல் இஸ்லாம்’ பத்திரிகை ஆசிரியர் ப.தாவூத்ஷா ஆகியோரை அழகிய காரில் அமர்த்தி, ஆயிரக்கணக்கானோர் சூழ அழைத்து வந்தனர்.

எஸ்.எஸ்.ஆரோக்கியசாமி, எம்.பழனியப்பா ஆகியோர் தலைமையில், ஏராளமான செஞ்சட்டைத் தொண்டர்கள் முன்னே அணிவகுத்து வாழ்த்தொலிகள் முழங்கிச் சென்றனர். பாண்டு வாத்தியங்கள், மேளதாளங்கள் முழங்கச் சென்ற ஊர்வலக் காட்சியும் தொண்டர்களின் ஆரவாரமும் இருபுறமும் கூடியிருந்த மக்களிடையே உணர்வலைகளை உண்டு பண்ணின. காலை 9.45 மணிக்கு ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடைந்தது. கோவை ஜில்லா மாநாடுதான் என்றாலும், மாகாண மாநாடா என சந்தேகப்படும் அளவுக்குப் பல மாகாணங்களில் இருந்து எண்ணற்றோர் வருகைதந்திருந்தனர். சுமார் 3,000-க்கும் மேற்பட்டோர் குழுமியிருந்தனர்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில், ராவ் பகதூர் சாமியப்ப முதலியார் நீதிக்கட்சியின் கொடியை ஏற்றிவைத்தார். பின்னர், தாருல் இஸ்லாம் மாநாட்டைத் திறந்துவைத்து, நீண்டதொரு சொற்பொழிவாற்றினார். அதன்பிறகு, சிக்கைய நாயக்கர் வரவேற்புரை ஆற்றினார். அதனையடுத்து, தலைமைப் பேருரை நிகழ்த்திய முத்தையா செட்டியார். சர்ஏ.டி.பன்னீர்செல்வத்தின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, அவர் ஆற்றிய அரிய பணிகள் பற்றி ஆர்.கே.சண்முகம் செட்டியார் எடுத்துக்கூறினார். ‘ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு, இந்தியா எப்போது ஒன்றுபட்ட நாடாக இருந்தது? இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டுமென்பவர்கள், ஜின்னாவையும் பெரியாரையும் திட்டுவதால் பயனில்லை, அவர்களைக் கூப்பிட்டு, ஏன் இந்தக் கருத்து உங்களுக்கு வந்தது என்று கேட்க வேண்டும். பன்னீர்செல்வம் இன்று இருந்திருந்தால், தமிழ்நாட்டின் சுதந்திரத்துக்குத்தான் உழைப்பார்” என்றார்.

மதிய உணவுக்குப் பிறகு, மீண்டும் 4 மணிக்கு கூட்டம் தொடங்கியவுடன், கலந்துகொள்ள இயலாமைக்கு வருத்தம் தெரிவித்தும், மாநாடு வெற்றி அடைய வேண்டியும் பலரிடம் இருந்து வந்த கடிதங்களை, சிக்கைய நாயக்கர் வாசித்தார். இந்தி எதிர்ப்புப் போரில் உயிரிழந்த நடராசன், தாளமுத்து மரணத்திற்கு இரங்கல், கட்டாய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பூரண ஆதரவு அளித்த ஜின்னாவுக்கு நன்றி, புகையிலைக்கான புதிய விற்பனை வரிகளை ரத்து செய்ய வேண்டும். ரயில் நிலைய உணவு விடுதிகளில் பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதோருக்கான பாகுபாடுகளை நீக்க வலியுறுத்தல், பனகல் அரசரால் கொண்டு வரப்பட்ட இந்து பரிபாலன போர்டை எக்காரணம் கொண்டும் நீக்காமல் பாதுகாக்க வழிவகை செய்ய வேண்டும், இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனுக்கு ஆதரவு உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அண்ணா பேசும்போது, ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற பெரியாரின் முழக்கத்தை ஒட்டியே கருத்துகளை முன்வைத்தார். இறுதியாக பேசிய பெரியாரும், ஐரோப்பாவையும் இந்தியாவையும் ஒப்பிட்டு, ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கத்தை ஏன் வைத்தார் என்பதற்கான விளக்கமாகவே தனது உரையைப் பேசினார்.

...கூட்டம் திரளும்

## கட்டமைப்பைச் சிதைக்கும் காலம், அறம் எழும்!

தமிழ்நாட்டின் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், உள்கட்டமைப்பு ஆகியவற்றை நேரடியாகச் சந்திக்க முடியாத ஒன்றிய பா.ஜ.க., இப்போது மிக வேகமாகத் தனது ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் செலுத்தத் தொடங்கியுள்ளது.

ஆட்சியில் அமர்ந்துள்ள கட்சி, எந்த இலக்கும் இல்லாமல் ஒன்றிய அரசின் எல்லா அழுத்தங்களுக்கும் தலையாட்டும் பொம்மையாக உள்ளது. அதன் விளைவுதான், மாநில உரிமைகளைப் பறிக்கும் வகையிலான ‘விபி ஜி ராம் ஜி’ போன்ற ஒன்றிய அரசின் திட்டங்கள் ஒவ்வொன்றாக தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கிறன.

மாநில அரசுடன் இணை நிர்வாகத்தை நடத்தத் திட்டமிடுகிறது ஆளுநர் மாளிகை. தி.மு.கழகத்தின் கடும் எதிர்ப்புதான் ஆளுநரின் இணை நிர்வாகத் தலையீட்டைத் தடுத்து நிறுத்தியுள்ளது. இப்போது, தமிழ்நாட்டு ஆளுநர் அர்லேக்கர், அடுத்த அம்பினை எய்துள்ளார்.

சென்னையில், கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தமிழ்நாட்டில் ‘குருகுலக் கல்வி முறை’யைச் செயல்படுத்த முடியவில்லை என வருத்தப்படுவதாகவும், ‘மெக்காலே கல்வி முறை’யின் போக்கினை மாற்றியமைக்கவே புதிய கல்விக் கொள்கை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் விளக்கம் அளித்துள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க.வின் இறுதி இலக்கு இதுதான். ‘கல்வி, உயர் வேலைவாய்ப்பு எல்லாம் குறிப்பிட்ட சமூகத்திற்கே’ என வரலாறு கொண்டுள்ள அவர்கள் வழியில், ‘தமிழ்நாட்டின் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்கிற சமூக நீதிக் கட்டமைப்பைச் சிதைக்கத் துடிக்கின்றனர். ஆட்சியில் அதை நிகழ்த்திவிட்ட காரணத்தால், அடுத்த கட்டமாகக் கல்வி வேலைவாய்ப்பில் நுழையத் தொடங்கியுள்ளனர்.

சிந்தனைப் பக்குவமற்ற சினிமா மோகத் தலைமுறையைக் கொண்டு, நூற்றாண்டுக்கால சமூக நீதி வரலாற்றைச் சிதைக்கத் தொடங்குவார்கள் எனில், தமிழ்ச்சமூகம் அறம் கொண்டு எழும்.

## ஃப்ளாஷ்பேக்



### பகுதிப் பிரதிநிதியாகப் பெற்ற வாழ்த்து!



ஏ.வி.இராமநாதன்

1993-ஆம் ஆண்டு, நான் முதன்முதலில் கழகத்தில், இன்றைய கழகத் தலைவர், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் பரிந்துரையின் பேரில், இளைஞர் அணியில் இருந்து, எங்கள் வட்டத்தின் பகுதிப் பிரதிநிதியாகத் தேர்வுசெய்யப்பட்டேன். அப்போது, தலைவர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்ற இனிய தருணம், அருகில் மாவட்டப் பிரதிநிதி மறைந்த ப.கருணாகரன் உள்ளார். கழகம் கண்ட சவால்களால், அந்தக் காலகட்டம் என்றைக்கும் மறக்க முடியாது.

– ஏ.வி.இராமநாதன், மாவட்டப் பிரதிநிதி, சென்னை மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

123


**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# அகழாய்வும் அச்சுறுத்தல்களும்...

சமகால இந்திய ஒன்றியத்தில், அரசியல் துறையைப் போலவே மதவாதம் ஆதிக்கம் செலுத்தத் துடிக்கும் மற்றொரு துறை தொல்லியல். காரணம், வரலாற்றைச் சிதைக்கத் துடிக்கும் வலது ஆதிக்கம்.

முன்முடிவுகளுடன் மேற்கொள்ளப்படும் அகழாய்வுகள், மசூதிகளை இலக்காகக் கொண்ட ஆராய்ச்சிகள், பன்மைத்துவத்திற்கு இடமற்ற ஒற்றைத்துவப் பார்வை என தொல்லியல் துறை எதிர்கொள்ளும் சவால்கள் முன்னெப்போதையும்விட மோசமானவை.

கடந்த காலத்தைத் தன்வசமாக்கிக்கொள்ள, வலதுசாரி கருத்தியல்கள் மோதும் களமாகத் தொல்லியல் உருவெடுத்துள்ளது. மண்ணுக்கடியில் பொதிந்திருக்கும் பழங்கால வரலாற்றுப் பொருள்களை தேடுவதில் உள்ள அரசியலை, மிக விரிவாக விளக்கிப் பேசும் நூல், ‘THE DIG: KEELADI AND THE POLITICS OF INDIA’S PAST’. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளரும் எழுத்தாளருமான சௌமியா அசோக், இந்நூலைத் திறம்பட எழுதியுள்ளார். HACHETTE INDIA பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.




தமிழ்நாட்டின் வைகை நதிக் கரையில், சங்ககால நகர நாகரிகம் ஒன்றிருந்ததை வெளிக்கொணர அச்சாணியாக இருக்கும் இடம், கீழடி. அத்தகைய சிறப்புக்குரிய இடம், தொல்லியல் ஆய்வுக்காக எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டது, இந்திய தொல்லியல் துறையைச் சேர்ந்த தமிழரான அமர்நாத் ராமகிருஷ்ணன், இந்த தொல்லியல் ஆய்வை எப்படி மேற்கொண்டார், கீழடி அகழாய்வில் மிகச்சிறிய பங்களிப்பை நல்கிய சாமானிய மனிதர்களின் வாழ்க்கைக் கதைகள் எப்படியானவை எனப் பல்வேறு அம்சங்களை இந்நூல் பேசுகிறது.

அதைப்போலவே, ‘தமிழி (தமிழ்-பிராமி) எழுத்துரு’ உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் கீழடிக்கும், சிந்துவெளி நகர நாகரிகத்திற்கும் இருக்கும் தொடர்பைப் புலப்படுத்தியபோது, கீழடித் தொல்லியல் ஆய்வு சந்தித்த அரசியல் நெருக்கடிகளையும் அதன்மூலம் கிடைத்த வெளிச்சத்தையும் ஆதரவையும் இந்நூல் கவனப்படுத்துகிறது.

இந்தியாவின் பிற பகுதிகளில், தொல்லியல் துறை எப்படிச் செயல்படுகிறது என்பதுடன், பா.ஜ.க. அரசின் செல்வாக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் இந்த ஆய்வுகள்மீது செலுத்தும் தாக்கங்களையும் இந்நூல் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். இந்நூலில் பல பகுதிகள் ஒரு துப்பறியும் தன்மையைக் கொண்டுள்ளன.

பிரிவினையின்போது, பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே பல்வேறு பொருட்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. அப்படி மொகஞ்சதாரோவில் தொல்லியல் ஆய்வின்போது, கிடைத்த நேர்த்தி மிகுந்த கழுத்துமாலை, மணி மணியாகப் பிரிக்கப்பட்டு, பகிரப்பட்ட துயரமான வரலாற்றுச் சம்பவங்களும் இந்நூலில் உண்டு.

‘ஜல்லிக்கட்டு’, ‘கீழடி அருங்காட்சியகம்’, கீழடியைப் போலவே கேரளத்தின் ‘பட்டணம்’ அகழ்வாராய்ச்சி, ஆதிச்சநல்லூரிலும் சிவகளையிலும் கிடைத்த இரும்புத் தொல்பொருட்கள்மூலம் நிறுவப்பட்ட ‘இரும்பின் தொன்மை’ எனத் தொல்லியல் தொடர்புடைய பிற விஷயங்கள் குறித்தும் இந்நூல் பேசுகிறது.

கடந்த காலம், சமகாலத்தில் செலுத்தும் தாக்கத்தைப் போலவே, சமகாலமும் கடந்த காலத்தில் தாக்கம் செலுத்துகிறது என்ற செய்தி, நூல் முழுக்க பரவிக்கிடக்கிறது. தொல்லியல் துறை தொடங்கி, வரலாற்றுத் துறை வரை இந்துத்துவம் கருத்தியல்ரீதியாக நிகழ்த்திவரும் அச்சுறுத்தல்களை அடையாளம் காட்டும் இந்நூல், அரசியல் நோக்கர்களால் அவசியம் வாசிக்கப்பட வேண்டும்.

...வாசிப்போம்.

## கருவூலம்

### தமிழர் நல்வாழ்வுக்கான இயக்கம்!

1977-ஆம் ஆண்டு, நாவலர் வழியாகக் கழகம் நெருக்கடியைச் சந்தித்தபோது, அன்னை மணியம்மையார் அறிக்கை வெளியிட்டார். ‘தி.மு.க. என்பது மிகவும் கெட்டியான பூட்டு. அதற்கு கள்ளச்சாவி போட செய்யப்படும் முயற்சிகள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்’ என்றும், ‘தி.மு.க. என்பது 60 ஆண்டு பாரம்பரியம் உள்ள தமிழர் நல்வாழ்வுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய ஒரு மாபெரும் அரசியல் இயக்கம்’ என தந்தை பெரியார் எழுதியதை நினைவூட்டி இருந்தார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900